# கோலாலம்பூரில் மாநகர் சேவைகளை நவீனப்படுத்த, வாகனப் போக்குவரத்தை எளிதாக்க ஏஐ தொழில்நுட்பம் - டிபிகேஎல் திட்டம்



கோலாலம்பூர், மே 21-

கோலாலம்பூர் மாநகரில் விவேக மாநகர் நிர்வாக அம்சங்களை அமல்படுத்தவும் வாகனப் போக்குவரத்தை எளிதாக்கவும் ஏஐ தொழில்நுட்பத்தை அமல்படுத்த கோலாலம்பூர் மாநகர் (டிபிகேஎல்) தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

இந்த இரட்டைத் திட்டமானது ஆக்கப்பூர்வமான நகர்ப்புறத் திட்டத்திற்கு ஊக்கமளிப்பதோடு பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் வழிவகுக்கிறது என்று டிஜிட்டல் அமைச்சு தெரிவித்தது.

ஏஐ தொழில்நுட்ப நிர்வாகம், வாகனப் போக்குவரத்து நெரிசல்களை வெகுவாகக் குறைப்பதோடு விபத்துகளை விரைந்து தெரிந்து கொண்டு நடவடிக்கை எடுப்பதற்கும் உதவுகிறது. மேலும் சாலை விபத்துகளைக் குறைப்பதிலும் சாலைப் பாதுகாப்பை மேம்படுத்துவதிலும் அதன் பங்களிப்பு அபரிமிதமாக இருக்கும் என்று டிஜிட்டல்துறை துணை அமைச்சர் டத்தோ வில்சன் உகாக் கும்போங் கூறினார்.

கோலாலம்பூர் போன்று பிரதான நகரங்கள் ஏஐ தொழில்நுட்பத்தை இந்நோக்கத்திற்காகப் பயன்படுத்தத் தொடங்கி இருக்கின்றன. இது நகர்ப்புற கட்டமைப்பையும் சேவைகளையும் நவீனப்படுத்துவதற்கு முக்கியப் பங்களிப்பை வழங்குகிறது. இதன்வழி மாநகர்வாசிகளின் வாழ்க்கைத் தரம் மேம்பாடு காண்பதோடு மாநகர் நிர்வாக மேலாண்மையை சீரிய முறையில் முன்னெடுப்பதற்கும் வழிவகுக்கிறது என்று அவர் சொன்னார்.